முழுப்பதிப்புரிமையுடையது
All right Reserved

பரீட்சை இல -05

மாகாண கல்வித் திணைக்களம், வடமத்திய மாகாணம்
Department of Education, North Central Province

"பிரதிபிரபோதா" மாணவர் திறன்காண் மதிப்பீடு-2020
வினாத்தாள்- I

சுட்டெண்..... -

தரம் -5

நேரம்- 01மணித்தியாலம்

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- **மூன்றாம்** பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன **எல்லா வினாக்களுக்கும்** உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் **கீழ்க் கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒருதாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
01	
02	
03	
04	
05	
06	
07	
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டெண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளிவழங்கும் திட்டத்திற்கேற்ப வினாத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்திகிறேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன்	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன்	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப்புள்ளிகள் சரியாகும்.	

www.ukedu.lk

Scanned with CamScanner

LEARN EASY
KNOWLEDGE IS POWER

zoom
வகுப்புக்கள்

Grade 1 - A/L

Medium

TAMIL / ENGLISH

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala

Learn Easy வெளியீடு
புலமைவளரி
இலக்கை நோக்கி

Call: 76667 4945


தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன


www.learneasy.lk || www.lkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER


- **01, 02ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள கோலத்தைப் பூரணப்படுத்துவதற்கு ? குறியுள்ள இடத்தில் வரவேண்டிய பொருத்தமான பகுதியைத் தெரிவுசெய்க.**

01.






(1)




(2)



(3)

02.



?



(1)



(2)



(3)

- **03, 04 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள நான்கு உருக்களுள் ஒன்று ஏனையவற்றிலிருந்து வித்தியாசமானது. அவ்வித்தியாசமான உருவைக் குறிக்கும் விடையைத் தெரிவுசெய்க.**

03.



A **B** **C** **D**

(1) B (2) C (3) A

04.




A **B** **C** **D**

(1) D (2) C (3) A

- **05, 06ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள உருக்களை அவதானித்து, தொடரில் அடுத்துவரும் உருவைத் தெரிவுசெய்க.**

05.



……..

www.lkedu.lk


Scanned with CamScanner


சுட்டெண்..... -



(1) (2) (3)

06.





(1) (2) (3)

07. **கோழி முட்டை வாங்கிக்**
குஞ்சுக்குவைப் பேனே
புள்ளிக் கோழிக் குஞ்சு
பொரிக்குமிரண் டைஞ்சு
குஞ்சுகள் வளர்ந்து
கோழியாகும் விரைந்து


இப்பாடல் வரிகளின்படி எத்தனை புள்ளிக் கோழிக் குஞ்சுகள் பொரிக்கும்?

(1) இரண்டு (2) ஐந்து (3) பத்து

08. **பாடசாலை : படிப்பு** என்பதுபோல **வைத்தியசாலை : .....**

(1) வைத்தியர் (2) மருந்து (3) சிகிச்சை

09. மூடியில்லாத திறந்த சதுர அட்டைப் பெட்டியின் **விரித்த வலையுரு வடிவம்** பின்வருவனவற்றுள் எதுவாக இருக்கலாம்?.



(1) (2) (3)

- **10, 11 ஆகிய வினாக்களில் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ள தொகுதியை ஒத்த தொகுதியைத் தெரிவுசெய்க.**

10. **3 A P 4 K 6 8 B W S**

(1) 3 A P 4 K 6 8 W B S (2) 3 A B 4 K 6 8 P W S (3) 3 A P 4 K 6 8 B W S

11. **3 α β 4 μ 5 6 β 4 2**

(1) 3 α β 4 μ 5 6 4 β 2

(2) 3 α β 4 μ 5 6 β 4 2

(3) 3 α β 4 μ 6 5 β 4 2

www.ikedu.lk


Scanned with CamScanner

- 12, 13ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள எண்கோலங்களிலுள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

12. **2 0 1 9 2 0 2 0 2 0 2 1 2 … 2 2**


(1) 2 (2) 1 (3) 0

13.



(1) 66 (2) 61 (3) 60

- கீழேயுள்ள உருவில் அ, ஆ, இ என்னும் ஒரேயளவான மூன்று பெரிய சதுரங்கள் பொருத்தப்பட்டுள்ள விதம் காட்டப்பட்டுள்ளது. அதனை அவதானித்து 14,15,16ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.



14. அ, ஆ, இ ஆகிய மூன்று பெரிய சதுரங்களினுள்ளும் அடங்கும் எழுத்துக்கள் யாவை?

(1) M, N, H, I (2) L, M, N, G, H, I (3) H, I, J

15. 'அ', 'ஆ' ஆகிய பெரிய சதுரங்கள் இரண்டிற்குள்ளும் மாத்திரம் அடங்கும், சதுரம் 'இ' க்குள் அடங்காத எழுத்துக்கள் எத்தனை உள்ளன?

(1) 5 (2) 6 (3) 7

16. ஏதாவது ஒரு பெரிய சதுரத்துக்குள் மாத்திரம் அடங்கும் எழுத்துக்கள் எத்தனை உள்ளன?

(1) 14 (2) 16 (3) 20

www.lkedu.lk

Scanned with CamScanner

- **பின்வரும் பாடல் வரிகளை வாசித்து 17, 18ஆம் வினாக்களுக்கு விடை காண்க.**


……..

கொண்டு சென்ற தேனையே அழகு மிக்க கூட்டினை
கூட்டில் சேர்த்தல் நிச்சயம். அழித்து, நல்ல தேனையே
கூடு தன்னை மாந்தர்கள் அடைய வேண்டின் அழியுமே,
குலைத்துவிடுதல் நிச்சயம். ஆயிரம் உயிர், நிச்சயம்!

17. இப்பாடல் வரிகள் மூலம் உணர்த்தப்படும் பிரதான பாடம்
    (1) அனைத்தும் நிச்சயமே
    (2) ஒன்றின் அழிவில் மற்றொன்றின் வாழ்வு அமைகின்றது
    (3) தேனீக்கள் தேனைக் கூட்டில் சேமிக்கின்றன

18. தேனீயின் கூட்டை அழிப்பவர்கள்
    (1) மனிதர்கள் (2) தேனீக்கள் (3) கூடு தானாக அழியும்

19.



இலக்கங்கள் இடப்பட்ட 8 கடதாசி அட்டைகள் அடுக்கப்பட்டுள்ளதை உரு காட்டுகிறது. முதல் ஏழு அட்டைகள் அடுக்கப்பட்டுள்ள ஒழுங்கு


(1) 3 1 7 6 8 4 5

(2) 3 6 7 1 8 4 2

(3) 3 6 1 7 8 5 2

20. நம் நாட்டிலுள்ள பாடசாலைப் பிள்ளைகளுக்கு கல்வி அமைச்சு மூலம் வழங்கப்படும் சுரக்ஷா காப்புறுதித் திட்டத்தின் **மகுட வாசகம்**
    (1) என்றென்றும் காத்திடுவோம் - தேசத்தின் பிள்ளைகளை
    (2) ஒரு தாய் மக்கள் நாமாவோம்
    (3) வளமான எதிர்காலம் - சுகமான வாழ்க்கை

- கீழேயுள்ள ஐந்து முக்கோணிகளில் 13 தொடக்கம் 17 வரையான இலக்கங்களை எழுதுவதற்கான ஒழுங்குகள் தரப்பட்டுள்ளன. அதற்கேற்ப 21ம் 22ம் வினாக்களுக்கு விடை காண்க.



  - 14க்கும் 16க்குமிடையில் வரும் எண்களின் கூட்டுத்தொகை 30 ஆகும்.
  - 15க்கும் 16க்குமிடையில் வரும் எண்களின் கூட்டுத்தொகை 44 ஆகும்

21. முக்கோணிகளினுள் இலக்கங்கள் வரும் ஒழுங்கு
    (1) 14 13 15 16 17 (2) 15 17 14 16 13 (3) 15 14 17 13 16

22. இக்கோலத்தில் இடமிருந்து முதலாவது முக்கோணியினுள் வரும் எண்
    (1) 13 (2) 15 (3) 17

www.ikedu.lk

Scanned with CamScanner


23. கீழ்வரும் உரையாடலை வாசிக்குக.

குரல் 1 : ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?
குரல் 2 : மறுபக்கத்திற்குச் செல்லவேண்டும்.
குரல் 1 : வாருங்கள் ஐயா, அந்த மஞ்சள் கோட்டுக் கடவையில் செல்வோம்.
குரல் 2 : நன்றி, தம்பி.

இவ்வுரையாடல் நடைபெற்ற இடமாக இருக்கக் கூடியது

(1) வைத்தியசாலை (2) சந்தை (3) பெருந்தெரு

24.



உருவில் முக்கோணிகளினுள் உள்ள புள்ளிகள் எத்தனை?

(1) 5 (2) 6 (3) 8

- 25, 26ஆம் வினாக்களில் இவ்விரண்டு கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன.
  - கூற்று - 1 ஒரு செயலும், கூற்று - 2 அதற்கான காரணமும் எனின் முதலாவது விடையையும்,
  - கூற்று - 2, கூற்று - 1 இற்கான காரணம் இல்லை எனின் இரண்டாவது விடையையும்,
  - கூற்று - 1க்கும் கூற்று - 2க்கும் காரண காரியத் தொடர்பு எதுவுமில்லை எனின் மூன்றாவது விடையையும் தெரிவு செய்க.

25. **கூற்று 1**: நாட்டில் மக்கள் சுகாதாரப் பழக்கவழக்கங்களை மிகவும் அவதானத்துடன் பின்பற்றுகின்றார்கள்.

கூற்று 2: நாட்டில் தொற்று நோய் வேகமாகப் பரவுகின்றது.


(1) சரி (2) பிழை (3) சம்பந்தமில்லை

26. **கூற்று - 1**: விவசாயிகள் ஒரு நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள்.

கூற்று - 2: ஒரு நாட்டின் எதிர்கால சிற்பிகள் மாணவர்களே.

(1) சரி (2) பிழை (3) சம்பந்தமில்லை

- காலை 8.15 மணிக்கு கண்டியிலிருந்து புறப்பட்ட பேரூந்து ஒன்று வவுனியாவை நோக்கி ஒரு **மாறாத கதியில் நிறுத்தாமல் சென்றது**. அப்பேரூந்து சென்ற பயண விபரம் கீழே தரப்பட்டுள்ளது.



சென்றடைந்த நகரம்	நகரத்திலுள்ள மைல்கல்	சென்றடைந்த நேரம்
மாத்தளை	26 km	காலை 8.41
தம்புள்ளை	.....	காலை 9.27
வவுனியா	178 km	காலை 11.13

www.lkedu.lk

Scanned with CamScanner


27. மாத்தளையிலிருந்து தம்புள்ளைக்குள்ள தூரம் 46 km எனின், தம்புள்ளை நகரிலுள்ள மைல்கல்லில் (கிலோமீற்றர் தூணில்) என்ன தூரம் பொறிக்கப்பட்டிருக்கும்?

(1) 46 km (2) 72 km (3) 100 km

28. கண்டியிலிருந்து வவுனியாவுக்குள்ள தூரம் எவ்வளவு?

(1) 98 km (2) 178 km (3) 276 km

- A, B, C, D, E, F என்னும் கண்ணாடிக் குற்றிகள் ஒன்றோடொன்று ஒட்டப்பட்டுள்ள விதம் உருவில் தரப்பட்டுள்ளது. உருவை அவதானித்து 29, 30ஆம் வினாக்களுக்கு விடை தருக.



29. ஒரு முகம் மாத்திரம் இன்னுமொரு முகத்துடன் ஒட்டப்பட்டுள்ள கண்ணாடிக் குற்றிகள் யாவை?

(1) A, D (2) E, F (3) D, E

30. இக்குற்றிகளுள் மூன்று முகங்கள் ஒட்டப்பட்டுள்ள கண்ணாடிக் குற்றிகள் எத்தனை உள்ளன?

(1) 1 (2) 2 (3) 3

31. மந்திரப் பெட்டியொன்றினுள் ஒரு பொருளை வைத்தால், **ஒவ்வொரு நிமிடமும் அப்பெட்டியினுள் உள்ள பொருளின் அளவு இரட்டிப்பாகிச் செல்லும்.** இப்பெட்டியினுள் ஆரம்பத்தில் ஒரு கிலோகிராம் சீனியைப் போட்ட பின்னர், அப்பெட்டியின் அரைப் பங்கு நிரம்புவதற்கு 13 நிமிடங்கள் சென்றன. இன்னும் எவ்வளவு நேரத்தில் அப்பெட்டி முற்றாக நிரம்பும்?

(1) 26 நிமிடங்களில் (2) 13 நிமிடங்களில் (3) 1 நிமிடத்தில்

32. குமாரிடம் உள்ள பணத்தொகையின் அரைவாசி நிசாரிடமும், நிசாரிடம் உள்ள பணத்தின் அரைவாசி கமாலிடமும் உள்ளது. மூவரிடமும் உள்ள மொத்தத் தொகை ரூபா 1750 ஆகும். இவர்களில் குறைந்த தொகைப் பணமுள்ளவரிடம் இருப்பது எவ்வளவு?

(1) ரூபா 150 (2) ரூபா 250 (3) ரூபா 500

33. 2020ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஐந்து வியாழக்கிழமைகள் உள்ளன. அவற்றில் மூன்று வியாழக்கிழமைகளின் திகதிகள் இரட்டை எண்களாகும். அம்மாதத்தின் 10ம் திகதி என்ன நாள்?

(1) வெள்ளிக்கிழமை (2) வியாழக்கிழமை (3) புதன்கிழமை

34. சபியா தன்னிடமுள்ள 6 வெள்ளைக் காலுறை(சொக்ஸ்)களையும் 4 கறுப்புக் காலுறைகளையும் ஓர் அலுமாரியில் ஒன்றாக வைத்திருக்கின்றாள். அலுமாரியினுள் பார்க்காமல், சரியான ஒரு சோடிக் காலுறைகளை எடுப்பதற்கு **ஆகக்குறைந்தது** எத்தனை காலுறைகளை அவள் அலுமாரியிலிருந்து வெளியே எடுக்கவேண்டும்?

(1) 6 (2) 4 (3) 3

35. 12 ஆடுகள் 12 புல் கட்டுக்களை 12 நிமிடங்களில் சாப்பிட்டு முடிக்கும். இதேபோன்ற 4 புல் கட்டுக்களை 4 ஆடுகள் சாப்பிட்டு முடிக்க எவ்வளவு நேரம் எடுக்கும்?

(1) 4 நிமிடங்கள் (2) 12 நிமிடங்கள் (3) 8 நிமிடங்கள்

www.ikedu.lk

Scanned with CamScanner

36. 21ம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்துக்குரிய ஆண்டு

(1) 2010 (2) 2015 (3) 2021


37. ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து வடக்குத் திசையில் ஒருவரும் கிழக்குத் திசையில் ஒருவருமாகப் பிரிந்து செல்லும் இருவர், சம அளவான தூரங்கள் சென்ற பின்னர், மீண்டும் ஒரே இடத்தில் சந்திப்பதற்கு, அவர்கள் செல்லும் திசைவழியே இருவரும் திரும்ப வேண்டிய பக்கங்கள்

(1) இருவரும் தத்தமது வலது பக்கம் திரும்பிச் செல்லவேண்டும்
(2) வடக்கில் செல்பவர் வலது பக்கமும், கிழக்கில் செல்பவர் இடது பக்கமும் திரும்பிச் செல்ல வேண்டும்.
(3) வடக்கில் செல்பவர் இடது பக்கமும், கிழக்கில் செல்பவர் இடது பக்கமும் திரும்பிச் செல்ல வேண்டும்.

38. P, Q, R, S, T ஆகியோர் ஒவ்வொருவரும் நீலம், கறுப்பு, பச்சை, சிவப்பு, மஞ்சள் நிற பேனைகளில் ஏதாவது ஒரு நிறப் பேனையை வைத்திருக்கின்றனர். இங்கு நிறங்கள் ஒழுங்கில் தரப்படவில்லை. P வைத்திருக்கும் பேனை நீலமோ அல்லது மஞ்சளோ அல்ல. R கறுப்புப் பேனையும், T பச்சை நிறப் பேனையும் வைத்திருக்கின்றனர். சிவப்பு நிறப் பேனையை வைத்திருப்பவர் யார்?

(1) P (2) Q (3) S

- விமலன், அமலன், நிமலன், கமலன், தயாளன் ஆகிய ஐந்து நண்பர்கள் விருந்தகம் ஒன்றில் நட்சத்திர வடிவான மேசையைச் சுற்றி ஒருவரையொருவர் நோக்கியவாறு அமர்ந்திருந்த விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.



- தயாளனின் வலது பக்கத்தில் அமலன் இருக்கின்றார்.
- நிமலனுக்கும் விமலனுக்குமிடையில் கமலன் அமர்ந்துள்ளார்.
- அமலனின் வலதுபுறமாக விமலன் இருக்கின்றார்.

39. T அமலனைக் குறிக்குமாயின், நிமலனுக்கும் அமலனுக்குமிடையில் அமர்ந்திருப்பவர்

(1) விமலன் (2) தயாளன் (3) கமலன்

40. P, Q, R, S, T ஆகிய எழுத்துக்கள் குறிப்பது முறையே

(1) தயாளன், நிமலன், கமலன், விமலன், அமலன்
(2) விமலன், அமலன், தயாளன், நிமலன், கமலன்
(3) கமலன், நிமலன், தயாளன், அமலன், விமலன்

www.lkedu.lk

Scanned with CamScanner

முழுப்பதிப்புரிமையுடையது
All right Reserved

பரீட்சை இல -05

மாகாண கல்வித் திணைக்களம், வடமத்திய மாகாணம்
Department of Education, North Central Province

"பிரதிபிரபோதா" மாணவர் திறன்காண் மதிப்பீடு-2020

வினாத்தாள்- II

சுட்டெண்..... -

தரம் -5

நேரம்- 01மணித்தியாலம் 15 நிமிடம்

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- **மூன்றாம்** பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன **எல்லா வினாக்களுக்கும்** உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக. (சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன)
- விடையின் கீழ் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **கோட்டினை மாத்திரம்** இடுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- மூன்று விடைகள் தரப்பட்டுள்ள **வினாக்களில்** சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
01	
02	
03	
04	
05	
06	
07	
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டெண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளிவழங்கும் திட்டத்திற்கேற்ப வினாத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்திகிறேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன்	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன்	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப்புள்ளிகள் சரியாகும்.	

www.lkedu.lk

Scanned with CamScanner

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்

தமிழ் மொழி மூலம்



ENGLISH MEDIUM

සිංහල මාධ්‍ය

இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

01. **பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

நாற்பண்புகள் அல்லது நாற்குணங்கள் என்பவை ஆண், பெண் இருபாலாருக்கும், அவரவர் இயல்புகளுக்கேற்ப அமைந்திருக்க வேண்டிய பண்புகளாக சான்றோர்களால் வகுத்துக் கூறப்பட்ட குணங்களாகும். ஆண்களுக்குரிய பண்புகளாக அறிவு, நிறை, ஒர்ப்பு, கடைப்பிடி ஆகிய குணங்களும், பெண்களுக்குரிய பண்புகளாக அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய இயல்புகளும் வகுத்து விளக்கப்பட்டுள்ளன.

- **பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.**

(i) பெண்களுக்கே உரித்தான குணங்களை எழுதுக.

……

(ii) **வெட்கம்** என்ற கருத்தைத் தரும் சொல்லை எழுதுக.

……

(iii) **அறிவிலிகள்** என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

……

(iv) **'வகைப்படுத்தித் தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளன'** என்ற கருத்தைத் தரும் சொற்றொடரை எழுதுக.

……

(v) பந்தியில் உள்ள ஒரு சொல் எழுத்துப் பிழையாக எழுதப்பட்டுள்ளது. அச்சொல்லைச் சரியாக எழுதுக.

……

(vi) இப்பந்திக்குப் பொருத்தமான ஒரு தலைப்பைப் பந்தியிலிருந்து தெரிந்து எழுதுக.

……

02. கீழுள்ள வாக்கியத்தை தன்மை, பன்மை, உயர்திணை, இறந்தகால வாக்கியமாக எழுதுக.

உயரப் பாய்ந்த பந்தை மாணவர்கள் ஓடிச்சென்று பிடிக்கிறார்கள்

……

03. கீழே ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள சொற்களில் இவ்விரண்டு சொற்கள் ஏதோவொரு விதத்தில் தொடர்புள்ளவையும், ஒரு சொல் வேறுபட்டதுமாகும். வேறுபட்ட சொல்லின் கீழ்க் கோடிடுக.

(i) சருமம் பிளவு தோல் வலி ஐக்கியம்

(ii) வெந்நீர் உறக்கம் துயில் தண்ணீர் களிப்பு

(iii) சீற்றம் பாதகம் புனிதம் சாதகம் சினம்

04. கீழேயுள்ள வாக்கியங்கள் ஒவ்வொன்றையும் **எதிர்ப்பால்** வாக்கியமாக மாற்றி எழுதுக.

(i) அவர்கள் இருவரும் சிறந்த வீரர்களாவர்

……

(ii) யுவதிகள் இருவரும் தன்னந்தனியே சென்றனர்

……

www.lkedu.lk

Scanned with CamScanner

சுட்டெண்..... -

05. சொற்களைச் சேர்த்தெழுதுக.

(i) மண் + குடம் : ……. ii) மா + காய் : ……

06. (i) தேர்தலில் போட்டியிடுபவர் வேட்பாளர் போல, தேர்தலில் வாக்களிப்பவர்

……

(ii) நெல்லுக்குத் தாள் போல, புல்லுக்கு ……

07. (i) பின்வரும் பாடலில் இடைவெளியில் வரவேண்டிய வரியைத் தெரிவு செய்து கீறிடுக.

எள்ளினும் சிறிய எறும்பைப் பார்! - அது
எதையும் இழுத்துச் செல்வதைப் பார்
உள்ளம் கொண்ட ஊக்கத்தால் - அது

……

(உன்னையும் கூட இழுத்துவிடும்! / உயர்வு பெறுவாய்! இது உண்மை!)

(ii) நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப் போல் காணுமே - அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர் மேல் எழுத்துக்கு நேர்.

இவ்வருளுரை இடம்பெற்றுள்ள நீதிநூலின் பெயரை எழுதுக. ……

08. அடைப்பினுள் தரப்பட்டுள்ள சொற்களிலிருந்து தெரிந்து விடையளிக்குக.

வடலி - கங்கணங்கட்டுதல் - குறுகுறுத்தல் - நீட்டி நிமிர்ந்து
வெது வெது - ரீங்காரமிடுதல் - வடவை

(i) இணைமொழி :
……

(ii) ஒரு செயலை முடிக்க உறுதியாக இருத்தல் :
……

(iii) பனையின் இளமைப் பெயர் :
……

(iv) இரட்டைக்கிளவி :
……

(v) புறா எழுப்பும் ஒலி :
……

09. ஒழுங்கின்றி மாறியிருக்கும் சொற்களை ஒழுங்குபடுத்தி வசனமாக்குக.
அன்னையின் / இயற்கை / படைப்பில் / அற்புதமே! / அனைத்தும்
……

10. தமிழ் மொழியிலுள்ள வல்லின எழுத்துக்களை எழுதுக.
……

11. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.

i. National Anthem : …… ii. Needle : ……

www.ikedu.lk

Scanned with CamScanner

12. தமிழ் வசனங்களின் கருத்துக்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளன. ஆங்கில வசனத்தில் விடுபட்ட இடத்தில் வரவேண்டிய சரியான சொல் அல்லது சொற்றொடரின் கீழ்க் கோடிடுக.

i. தயவுசெய்து நான் பேசுவதைக் கேளுங்கள். : …… me please. (Listen to / Listen)

ii. நாங்கள் மகிழ்ச்சியாக வாழ்வோம்! : Let's live …… (happy / happily)

13. படத்தில் உள்ள செயற்பாட்டைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லை எழுதுக.

(i)  ……..

(ii)  ……

14. **பிரஹஸ்பதிந்தா** என்னும் சிங்களச் சொல்லின் தமிழ் கருத்தை எழுதுக.

……...

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

பஸ் நிலையம் எங்கே? ……

- **பின்வரும் வினாக்களுக்கான விடைகளை தரப்பட்டுள்ள புள்ளிக்கோடுகளில் எழுதுக.**

16. கீழேயுள்ள ஒவ்வொரு பெட்டியிலிருந்தும் ஒவ்வோர் எண்ணைத் தேர்ந்தெடுத்து உருவாக்கக் கூடிய மிகப்பெரிய நான்கிலக்க எண்ணை எழுதுக.


8 3 4	0 6 2	3 1 4	1 2

……

17. **18305** என்னும் எண்ணைக்கொண்டு அட்டவணையில் விடுபட்ட இடங்களைப் பூரணப்படுத்துக.

இலக்கம் 3 உள்ள இடம்	……
இலக்கம் 1இன் இடப்பெறுமானம்	……
இலக்கம் 8 இனால் வகைக்குறிக்கப்படும் பெறுமானம்	……


18. **6 மணிக்கு 10 நிமிடம்** என்னும் நேரத்தை இக்கடிகார முகத்தில் வரைக.



19. மளிகைக் கடையொன்றில் இருந்த 10kg நிறையுடைய சீனி மூட்டையிலிருந்து 3kg 250g சீனி விற்கப்பட்டபின்னர் எஞ்சியுள்ள சீனி எவ்வளவு?

....……kg ……g

20. X, Y, Z ஆகிய மூன்று நகரங்களுக்கிடையிலான தூரங்களைக் காட்டும் படம் தரப்பட்டுள்ளது. நகரம் X இலிருந்து நகரம் Yயினூடாக நகரம் Z வரையிலான தூரம் 64km 450m ஆகும். Yஇலிருந்து Zவரையுள்ள தூரம் 18km 340m ஆயின், X இலிருந்து Y வரையிலான தூரம் எவ்வளவு?



....……km ……m

www.lkedu.lk

Scanned with CamScanner

21. அபீரா கடைக்குச் சென்று 835ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் வாங்கிய பின், 1000ரூபா தாள் ஒன்றைக் கடைக்காரரிடம் கொடுத்தாள். மீதியாக அவளுக்கு நாணயத் தாள்கள் இரண்டும், நாணயக் குற்றிகள் இரண்டும் கிடைத்தன. அபீராவுக்குக் கிடைத்த நாணயக் குற்றிகள் இரண்டும் யாவை? …….…… நாணயம் …… நாணயம்

22. ஒவ்வொரு பேரூந்திலும் 52 பயணிகள் ஆசனங்கள் உள்ள, 4 பேரூந்துகளில் அநுராதபுரக் கல்லூரி ஐந்தாந்தர மாணவர்கள் கல்விச் சுற்றுலா சென்றனர். ஒவ்வொரு பேரூந்திலும் 3 ஆசிரியர்கள் வீதம் பயணஞ்செய்தனர். இச்சுற்றுலாவில் பங்குபற்றிய ஐந்தாந்தர மாணவர்கள் எத்தனை பேர்? …….……..


23. ஒரு குறித்த நாளில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் புகையிரதம் பி.ப 2.50க்கு அநுராதபுரம் புகையிரத நிலையத்தை வந்தடையும். எனினும் புகையிரதம் 25நிமிடங்கள் தாமதமாக வருவதாக அறிவிக்கப்பட்டது. அப்புகையிரதம் எத்தனை மணிக்கு அநுராதபுரம் புகையிரத நிலையத்தை வந்தடையும்? …….……..

24. ஒன்றில் அரைவாசியை இலக்கத்தில் எழுதுக.? …….……..

25. ஒரு தேக்கரண்டியின் கொள்ளளவு 5ml ஆகும். ஒரு நோயாளிக்கு **ஒரு தடவைக்கு இரண்டு தேக்கரண்டிகள்** வீதம் **நாளொன்றுக்கு இரண்டு தடவைகள்** மருந்து கொடுக்கப்பட்டது. இந்நோயாளிக்கு மூன்று நாட்களுக்குக் கொடுப்பதற்குத் தேவையான மருந்து எவ்வளவு?

…….…….. ml

26. கீழுள்ள வடிவத்தை கடதாசி அட்டையை வெட்டி உருவாக்குவதற்கு




(i) அட்டையை எத்தனை வகையான வடிவங்களில் வெட்டவேண்டும்? ……..

(ii) எத்தனை அட்டைத் துண்டுகள் வெட்டவேண்டும்?
……..

27. மூன்று அடுத்தடுத்து வரும் எண்களில், விடுபட்ட எண்களை எழுதுக.: …. , 99999 , ….


…… , ……..

28. 

கனவுரு வடிவான இவ்வுருவை அம்புக்குறி காட்டும் திசையில் மேலிருந்து பார்க்கும்போது தெரியும் தோற்றத்தின் பெயர் யாது?

……..

29. (i) அகலம் 5 கட்டங்கள், நீளம் 8 கட்டங்கள் கொண்ட உருவை அருகிலுள்ள வரைதல் நெய்யரியில் வரைக.



(ii) நீர் வரைந்த உருவின் சிறப்புப் பெயர் என்ன?
……..

- இலக்கம் 30 தொடக்கம் 59 வரையிலான ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள மூன்று விடைகளிலிருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

30. தோட்டத்தில் உள்ள குப்பைகளை எரிப்பதால் இறந்துவிடும், விவசாயிகளுக்குப் பயன்மிக்க பிராணி

(1) கரையான் (2) மண்புழு (3) எறும்பு

www.ikedu.lk

Scanned with CamScanner

31. நீரில் மூழ்கிய ஒருவரை ஆரம்ப சிகிச்சையளிக்கும்போது **தவிர்க்க வேண்டியது**

(1) நேராகத் தரையில் கிடத்துதல்

(2) கழுத்துப் பகுதி வளையாமல் வயிற்றிலிருந்து நீரை வெளியேற்றுதல்

(3) நீரை வெளியேற்ற தலைகீழாகப் பிடித்தல்

32. பின்வரும் நடத்தைகளில் சமூகவிரோதச் செயல் **அல்லாதது**

(1) பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல்

(2) போதைப் பொருள் பாவனை

(3) வீதியில் குப்பைகளைக் கொட்டுதல்

33. **'எனது உள்ளம் அடைந்து கொண்ட அமைதியை முழு நாட்டுக்கும் பகிர்கின்றேன்'** என உணர்ந்து மொழிவது, சூரிய நமஸ்காரச் செயற்பாட்டில்

(1) முதலாவது படிமுறையில் (2) இரண்டாவது படிமுறையில் (3) மூன்றாவது படிமுறையில்

34. இலங்கையில் ஆதிவாசிகள் அதிகமாக வாழும் மாவட்டங்களில் ஒன்று

(1) பதுளை மாவட்டம் (2) களுத்துறை மாவட்டம் (3) காலி மாவட்டம்

35. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் **ஸ்ரீ விக்ரம் சர்வ சித்தி** என்னும் பெயரில் இலங்கையின் மூன்று பிரதேசங்களுக்கு மன்னனாக முடிசூட்டிக்கொண்ட தேசிய வீரர்

(1) கொங்காலேகொட பண்டா (2) மொனரவில கெப்பிட்டிபொல திசாவ

(3) தேசபிதா டி. எஸ். சேனாநாயக்க

36. வைகாசி மாதத்தில் பூக்கும் மலர்

(1) நாவல் (2) ஓக்கிட் (3) வாகை

37. உடனடி உணவுப் பொருட்களின் பொதி உறைகளில் பச்சை, மஞ்சள், சிவப்பு நிறங்களில் பொறிக்கப்பட்டிருப்பது,

(1) உணவுப் பொருளில் அடங்கியுள்ள போசணைப் பதார்த்தங்களின் அளவுகள்

(2) உணவுப் பொருள் தயாரிக்கப்பட்டுள்ள மூலப் பொருட்களின் அளவுகள்

(3) உணவுப் பொருளில் அடங்கியுள்ள சீனி, உப்பு, கொழுப்பு ஆகியவற்றின் அளவுகள்

38. பின்வரும் பிராணிக் கூட்டங்களில் ஆறு கால்கள் உள்ள கூட்டம்

(1) சிலந்தி, தேள், நண்டு (2) நத்தை, பாம்பு, அட்டை (3) வெட்டுக்கிளி, நுளம்பு, கரப்பான்

39. நமது நாட்டில் ஆழிப்பேரலை (சுனாமி) ஏற்படும் வாய்ப்பு உள்ள மாவட்டம்

(1) கண்டி மாவட்டம் (2) அநுராதபுர மாவட்டம் (3) அம்பாறை மாவட்டம்

40.  இவ்வுரு காட்டும் முகபாவனை குறிக்கும் உணர்ச்சி

(1) நடுநிலைத்தன்மை (2) வெறுப்பு (3) கோபம்

41. இலங்கையை வெளிநாட்டவர்கள் ஆக்கிரமித்திருந்தபோது, நமது நாட்டு மண்ணின் செழிப்பை இல்லாதொழிக்கும் நோக்கத்தில் திட்டமிட்டு எரித்து அழிக்கப்பட்ட தாவரம்

(1) இலுப்பை மரம் (2) நாக மரம் (3) வேப்ப மரம்

42. பின்வருவனவற்றில் ஒருவித்திலைத் தாவரத்தின் இயல்பு

(1) முளைக்கும்போது ஓர் இலை முதலில் தோன்றும்.

(2) தண்டில் கிளைகள் தோன்றும்.

(3) ஆணி வேர்த்தொகுதி காணப்படும்.

www.lkedu.lk

Scanned with CamScanner

43. சிறுநீரக வடிவான இலை காணப்படும் ஒரு தாவரம்

(1) கத்தாப்பு (2) பூவரசு (3) அடம்பன்

44. ஆழமற்ற நீர்நிலைகளில் மீன்பிடிப்பதற்குப் பயன்படும் ஓர் உபகரணம்

(1) பறி (2) கரப்பு (3) கரைவலை

45. நீராவியில் தயாரிக்கப்படும் உணவு வகை **அல்லாதது**

(1) பிட்டு (2) கொழுக்கட்டை (3) பாண்

46. பின்வரும் செயற்பாடுகளில் விரும்பத்தக்க மனிதப் பண்புகளில் **அடங்காதது**

(1) தனக்குத் தீங்கு செய்தவரையும் மன்னித்தல்.

(2) இரந்து வருபவரை விரட்டிவிடுதல்.

(3) அடுத்தவர் மகிழ்ச்சியில் நாமும் இன்பமடைதல்.

47. சேரனின் தந்தை இறந்த செய்தி கேட்டதும், குமரன் அட்டை ஒன்றைத் தபாலில் அனுப்பிவைத்தான். அவன் அனுப்பியது

(1) வாழ்த்து அட்டை (2) நன்றி நவிலல் அட்டை (3) அனுதாப அட்டை

48. குளிர்நீர் கொண்ட முகவை ஒன்றினுள் பனிக்கட்டிகளை இடும்போது அவதானிக்கக்கூடிய மாற்றம்

(1) பனிக்கட்டி விரைவாக உருகும்

(2) பனிக்கட்டி அமிழ்ந்து மிதக்கும்

(3) பனிக்கட்டி மிக விரைவாக மறைந்துவிடும்

49. தனது மீசையினால் தனது இரையைக் கண்டறியும் பிராணி

(1) நாய் (2) பூனை (3) ஆமடில்லா

50. உணவை மெல்லாமல் விழுங்கும் பிராணிகளின் கூட்டம்

(1) மாடு, புலி, சிங்கம் (2) தேனீ, கரப்பான், வண்ணத்துப்பூச்சி (3) பல்லி, ஓணான், தவளை

51. விசேட தினங்களில் **அரியதரம், வட்டிலப்பம், பாற்சோறு** ஆகிய பலகாரங்களைத் தமது வீடுகளில் செய்பவர்கள் முறையே

(1) தமிழர், சோனகர், சிங்களவர்

(2) சோனகர், சிங்களவர், தமிழர்

(3) சிங்களவர், சோனகர், தமிழர்

52. பின்வரும் சந்தர்ப்பங்களில் உயிராபத்து அதிகம் உள்ள சந்தர்ப்பம் **அல்லாதது**

(1) புகையிரதம் வருவது தெரிந்தும் தண்டவாளத்தைக் கடத்தல்

(2) வெள்ளம் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் ஓடையில் நீராடச் செல்லல்

(3) இடி மின்னல் ஏற்படும் வேளையில் திறந்த வெளியில் நிற்காதிருத்தல்

53. அருகிலுள்ள கட்டடத் தொகுதி



(1) உயர்நீதிமன்றக் கட்டடம்

(2) நூதனசாலைக் கட்டடம்

(3) பாராளுமன்றக் கட்டடம்

www.lkedu.lk

Scanned with CamScanner

54. மிளகாய் அதிகம் அடங்கியுள்ள உணவை அதிகம் உண்பதால் ஏற்படும் நோய்

(1) நீரிழிவு (2) இரைப்பையழற்சி (3) உயர் குருதியமுக்கம்

55. வலது குறைந்த ஒருவருக்கு நீர் உதவிசெய்யக்கூடிய விதம்

(1) உணவு சமைத்துக் கொடுத்தல்

(2) நோயாளர் காவு வண்டியை வரவழைத்தல்

(3) வீதியைக் கடக்க உதவுதல்

56. மீன்கள் நீரினுள் அசைந்து திரிவதற்குப் பயன்படுத்தும் அதன் உடற்பகுதி

(1) மார்புச் செட்டை (2) முதுகுச் செட்டை (3) வாற்செட்டை

57. படத்தில் காட்டப்பட்டுள்ள உபகரணம் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம் ஒன்று



(1) நெல் அறுவடையின்போது (2) வீதி அமைக்கும்போது

(3) கப்பலிலிருந்து பொருட்களை இறக்கும்போது

58. ஒரு மாவட்டத்தின் தலைமை அரச அதிகாரி

(1) பிரதேச செயலாளர் (2) ஆளுனர் (3) அரசாங்க அதிபர்

59. **தாவரங்களின் இராணி** என அழைக்கப்படும், மிகவும் மருத்துவக் குணம் நிறைந்த மூலிகைத் தாவரத்தின் இலை படத்தில் உள்ளது. அத்தாவரம் யாது?



(1) ஆடாதோடை (2) கற்பூரவள்ளி (3) துளசி

60. **'எழில் கொஞ்சும் எனது தாய் நாடு'** என்பதைத் தலைப்பாகக் கொண்டு **மூன்று** வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும். (எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்)

1. ……

……

2. ……

……

3. ……

……

www.ikedu.lk

Scanned with CamScanner